IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

C.C.7 /2025 Date : 11.07.2025 P.W. 1 / LW. 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ராமசாமி | ஆதார் எண் | |
| தந்தை பெயர்: | பொன்னுசாமி | தொழில் | வியாபாரம் |
| கிராமம் | செங்குறிச்சி | வயது | |
| 1ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.137 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 முதல் 4 எதிரிகள்ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல்விசாரணை..**

நான் செங்குறிச்சியில் வசித்து வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் அண்ணன் மனைவி மற்றும் அவரது மகள்கள். நான் வெளிநாட்டில் சம்பாதித்து இடம் வாங்கியிருந்தேன். அப்போது நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தோம். கூட்டுக்குடும்பமாக இருந்ததால் அந்த இடத்தை என் அண்ணன் பெயரில் எழுதி வைத்துவிட்டேன். பின்னிட்டு நான் வெளிநாட்டில்இருந்து வந்த பிறகு, என் அண்ணன் வெளிநாட்டிற்கு சென்று சம்பாதித்து இடம் வாங்கினார். அந்த இடத்தை என் அண்ணன், மனைவி பெயரில் இடம் வாங்கினார். அதனால் எங்களுக்கும், எதிரிகளுக்கும் மனஸ்தாபம் இருந்து வந்தது. இந்நிலையில் 19-11-2023 ல் மதியம் 02-30, 03- 00 மணிஇருக்கும். சம்பவத்தின் போது நான் வீட்டில்தான் இருந்தேன். எனது மகள் ராகவி பாத்திரத்தை சரியாக கழுவவில்லை என்பதால், நான் என் மகளை திட்டினேன். அதற்கு மகேஸ்வரியும், ராஜகுமாரியும் எங்களை தான் ஜாடையால் திட்டிகிறாய் என்று சொல்லி தேவுடியா பையா என திட்டினார். மகேஸ்வரி என்பவர் வீட்டில் இருந்த அருகாமனையை எடுத்துவந்தார், ராஜகுமாரி மண்வெட்டியை எடுத்துவந்தார். நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே மருமகன் மணிகண்டன் என்னை அசிங்கமாக சொல்லமுடியாத வார்த்தைகளால் திட்டினார். அந்த மண் வெட்டியை வாங்கி மணிகண்டன் தலையில் வெட்டினார். அதனால் எனக்கு 4 தையல் போட்டார்கள். அப்போது பிரேமா என்பவர் கெட்ட வார்த்தைகளால் திட்டினார். காயம்பட்ட இடத்திலேயே பிரேமா என்பவர் அவர் கையில் அணிருந்த வளையலை கொண்டு

அந்த காயத்திலேயே குத்தினார். மணிகண்டன் எங்களை குடும்பத்தோடு கொளுத்திவிடுவதாக கூறினார். நான் அடிபட்டதால் மருத்துவமனைக்கு சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும்.** இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யாததால் முடித்துவைக்கப்படுகிறது.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

(S/d.V.Gomathi)
Judicial Magistrate-I,
Ulundurpet.

Typed by P. Parameswari

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

C.C.7 /2025 Date : 11.07.2025 P.W. 2 / LW. 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. சுபலட்சுமி | ஆதார் எண் | |
| கணவர் பெயர்: | கவிதாஸ் | தொழில் | வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | செங்குறிச்சி | வயது | 21 |
| 1 ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.137 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 முதல் 4 எதிரிகள்ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல்விசாரணை..**

நான் செங்குறிச்சியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது பெரியப்பா. ஆஜர் எதிரிகளை தெரியும். பெரியம்மா மற்றும் அவரது மகள்கள். எனது பெரியப்பா மகள் ராகவி பாத்திரம் கழுவிக்கொண்டிருந்தார். அப்போது எனது பெரியப்பா ராமசாமி ஒழுங்காக பாத்திரம் விழக்க மாட்டாயா என கேட்டார். மேற்படி சம்பவம் 19-11-2023 மாலை 03-00 மணி இருக்கும். அதற்கு ஆஜர் எதிரியான எனது பெரியம்மா மற்றும் மகள்கள் எங்களை தானே திட்டுகிறீர்கள் என கேட்டார். இரண்டு பேரும் அசிங்கம், அசிங்கமாக திட்டினார்கள். அப்போது எனது பெரியம்மா குமாரி அருகாமனையை எடுத்துவந்தார். அக்கா மகேஸ்வரி மண்வெட்டியை எடுத்துவந்தார். அப்போது மகேஸ்வரி, அவரது கணவர் இருசக்கர வாகனத்தில் வந்த அவர் கட்டையை எடுத்து எனது பெரியப்பாவை அடிப்பதற்காக வந்தார். அப்போது ராகவி அதை தடுத்ததால் ராகவியின் மேல்விழுந்ததால், அவர் கீழே விழுந்துவிட்டார். அப்போது நான் 9 மாத கார்ப்பமாக இருந்ததால் நான் சண்டையை தடுக்கவில்லை. அப்போது என் அக்கா மகேஸ்வரி கையில் இருந்த மண்வெட்டியை மாமா மணிகண்டன் வாங்கி, ராமசாமி பெரியப்பாவின் நெற்றியில் வெட்டிவிட்டார். அதனால் எனது பெரியப்பாவிற்கு இரத்தம் வந்தது. உளுந்தூர்பேட்டை அரசுமருத்துவமனைக்கு சென்றார். ராமசாமி பெரியப்பாவை மகேஸ்வரி, பிரேமா, மணிகண்டன், குமாரி ஆகியோர்கள் அடிக்க வந்தார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யாததால் முடித்துவைக்கப்படுகிறது.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

(S/d.V.Gomathi)
Judicial Magistrate-I,
Ulundurpet.

Typed by P. Parameswari

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

C.C.7 /2025 Date : 11.07.2025 P.W. 3 / LW. 3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ஆதிமூலம் | ஆதார் எண் | |
| தந்தை பெயர்: | முனியன் | தொழில் | கொய்யாபழம் வியாபாரம் |
| கிராமம் | செங்குறிச்சி | வயது | 37 |
| 1ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.137 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 முதல் 4 எதிரிகள்ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல்விசாரணை..**

நான் செங்குறிச்சியில் கொய்யாபழம் வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 என் மாமா. அ.சா.2 எனது மாமாவின் தம்பி மகன். ஆஜர் எதிரிகள் எனது மாமாவின் மனைவி மற்றும் மகள்கள். மேற்படி சம்பவம் 19-11-2023 மாலை 03-00 மணி இருக்கும்.எனது மாமா அவரது மகள் ராகவி பாத்திரம் ஒழுங்காக விழக்கவில்லை என்று திட்டிக் கொண்டிருந்தார். அதற்கு எதிரிகளை திட்டுவதாக எதிரிகள் நினைத்து கொண்டு எனது மாமா ராமசாமியிடம் சண்டை வளர்த்தார்கள். எதிரிகள் நால்வரும் குச்சி எடுத்து எனது மாமா ராமசாமியை அடிக்க வந்தார்கள். அப்போது ராகவி தடுத்தார். அதனால் குச்சி ராகவியின் மேல் பட்டது. மகேஸ்வரி அருகாமனை எடுத்தார். ராஜகுமாரி மண்வெட்டியை எடுத்துவந்தார். மணிகண்டன் ராஜகுமாரியிடம் இருந்த மண்வெட்டியை பிடுங்கி என் மாமா ராமசாமி தலையில் வெட்டிவிட்டார். பின்னர் எதிரிகள் சென்றுவிட்டார்கள். அடிப்பட்ட உளுந்தூர்பேட்டை, அரசுமருத்துவமனைக்கு சென்றார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யாததால் முடித்துவைக்கப்படுகிறது.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

(S/d.V.Gomathi)
Judicial Magistrate-I,
Ulundurpet.

Typed by P. Parameswari

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

C.C.7 /2025 Date : 11.07.2025 P.W. 3 / LW. 3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ராகவி | ஆதார் எண் | |
| தந்தை பெயர்: | ராமசாமி | தொழில் | ஹோட்டலில் வேலை செய்துவருகிறேன் |
| கிராமம் | செங்குறிச்சி | வயது | 37 |
| 1ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.137 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 முதல் 4 எதிரிகள்ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

முதல்விசாரணை..

நான் செங்குறிச்சியில் ஹோட்டலில் வேலை செய்துவருகிறேன். அ.சா.1 என் அப்பா. அ.சா.2 ஐ தெரியும். அ.சா.3 எனது தாய் மாமா. ஆஜர் எதிரிகளை தெரியும் அவர்கள் எனது மாமாவின் மனைவி மற்றும் மகள்கள் ஆவார். மேற்படி சம்பவம் 19-11-2023 மாலை 03-00 மணியளவில் நான் பாத்திரம் கழுவிக்கொண்டிருந்த போது அதில் பத்து போகவில்லை என என் அப்பா என்னை திட்டினார். அப்போது அவர்கள் எனது அப்பாவை பார்த்து மகளை திட்டவில்லை, எங்களை தான் திட்டுகிறீர்கள் என கேட்டார்கள். அவர்கள் அனைவரும் தேவுடியா என அசிங்கமாக திட்டினார்கள். எனது அப்பாவும், எதிரிகளும் திட்டிக்கொண்டார்கள். பின்னர் மருமகன் மணிகண்டன் வந்தார். மகேஸ்வரி என்பவர் அருகாமனை எடுத்துவந்தார். அவரது அம்மா ராஜகுமாரி மண்வெட்டியை எடுத்துவந்தார். அவரது மருமகன் மணிகண்டன் இருசக்கர வாகனத்தில் வந்தார். கட்டையை எடுத்து வந்து, அதைக் கொண்டு என்னை அடித்து கீழே தள்ளிவிட்டார். அவரது மாமியாரிடம் இருந்த மண்வெட்டியை வாங்கி எனது அப்பா முன்பக்க தலையில் வெட்டிவிட்டார். பின்னிட்டு அவரது சின்னமகள் பிரேமா வந்தார். என்னையும், என் அப்பா ராமசாமியையும் செருப்பால் உடம்பில் அடித்தார்கள். அடிபட்டதால் என் அப்பாவை உளுந்தூர்பேட்டை அரசுமருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யாததால் முடித்துவைக்கப்படுகிறது.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

(S/d.V.Gomathi)
Judicial Magistrate-I,
Ulundurpet.

Typed by P. Parameswari

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

C.C.7 /2025 Date : 11.07.2025 P.W. 5 / LW. 5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. அரவிந்தன் | ஆதார் எண் | |
| தந்தை பெயர்: | ஆறுமுகம் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | பாதூர் | வயது | 23 |
| 1ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.137 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 முதல் 4 எதிரிகள்ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல்விசாரணை..**

நான் பாதூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் எனது மனைவி ராகவி கையொப்பம் செய்தார். சுமார் 2 வருடத்திற்கு முன்பாக போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்த செய்த போது நான் கையொப்பம் செய்தேன். **அந்த பார்வைமகசரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகும்.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

மறுவிசாரணை - இல்லை.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

(S/d.V.Gomathi)
Judicial Magistrate-I,
Ulundurpet.

Typed by P. Parameswari